தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1986, மே 7, புதன்கிழமை,

சித்திரை 24, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு—2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்
செறினும்சீர் குன்றல் இலர்"

போர் வந்தால் உயிரின்பொருட்டு அஞ்சாமல் போர் செய்யத் துணியும் வீரர், அரசன் சினந்தாலும் தம்முடைய சிறப்புக் குன்றாதவர் ஆவர்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. தகவல் கோரல்.

(அ) லால்குடி தொகுதி உறுப்பினரின் தேர்தல் வழக்கில் உயர்நீதி மன்றம் அளித்துள்ள தீர்ப்பு

* திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். இந்த மாமன்றத்திலே லால்குடி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்ற எங்கள் கட்சி சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. வெங்கடாசலம் அவர்களின் தேர்தல் குறித்து உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை ஒட்டி 28—4—1986 ஆம் தேதியன்று இந்தப் பேரவையில் ஒரு பிரச்சினை எழுந்தது. அந்தப் பிரச்சினை குறித்து மன்றத்திலே இருக்கின்ற பல்வேறு உறுப்பினர்களும், தாங்களும் பல கருத்துக்களை வெளியிடும் நேரத்தில் தாங்கள் அன்றையதினம் பேசுகின்ற நேரத்தில் அரசியல் சட்டத்தை மேற்கோள் காட்டியுள்ளீர்கள். அரசியல் சட்டம் 329 (பி) பிரிவிலே No election to either House of Parliament or to the House or either House of the Legislature of a State shall be called in question

except by an election petition presented to such authority and in such manner as may be provided for by or under any law made by the appropriate Legislature." என்பதை மேற்கோள் காட்டி தங்களுடைய கருத்தைச் சொன்னீர்கள். அதாவது, தேர்தல் வழக்கு என்பது, தேர்தல் நடந்து 45 நாட்களுக் குள்ளாகவே அந்தத் தேர்தல் வழக்கு சம்பந்தமான பிரச்சினைகள் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும், அப்படியிருந்தால்தான் சட்டமன்றப் பேரவை உறுப் பினர்கள் நிர்பயமாக, ஸ்திரத்தன்மையோடு சுதந்திரமாகப் பணியாற்றுவதற்குத் துணையாக இருக்கும் என்ற முறையில் கருத்து சொன்னீர்கள். ஆனால் 45 நாட்களுக்குப் பிறகு, தேர்தல் காலத்தில் தவறு நடந்திருந்தாலும்கூட நீதிமன்றம் தலையிட இயலாது என்ற கருத்து அன்றையதினம் பிரதிபலிக்கப் பட்டது. இன்றையதினம் காலையிலே நம்முடைய சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. வெங்கடாசலம் அவர்கள் டெல்லியி லிருந்து தொலைபேசியிலே பேசினார்கள். அவர்கள் உச்சநீதி மன்றத்திலே தொடர்ந்த வழக்கிலே உச்சநீதிமன்றம் தடை யாணை வழங்கியிருப்பதாகச் சொன்னார்கள். அதுவும் ஒருசில பத்திரிகைகளில் வந்திருக்கிறது. அன்று தாங்கள் சொன்ன கருத்துக்கு வலுவூட்டுவதாக உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு கிடைத் திருப்பதாகத் தெரிகிறது. இது சம்பந்தமாக நீதிமன்றத்தி லிருந்து தகவல் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உயர்நீதி மன்றத்திலிருந்தும் தகவல் இல்லை; உச்சநீதிமன்றத்திலிருந்தும் தகவல் இல்லை.

2. அறிக்கைகள் அளித்தல்.

(அ) விதி 111-ன் கீழ் குதிரைப் பந்தய ஒழிப்பு குறித்து மாண்புமிகு சட்ட அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்ச ரவர்கள் 111 வது விதியின்கீழ் ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, திரு. சித்தன் அவர்கள் கேட்டதைப்போல நானும் ஒரு ஒழுங்குப் பிரச் சினையை எழுப்ப விரும்புகிறேன். அமைச்சரவர்கள் 111-வது விதியின் கீழ் அறிக்கையை வைத்ததற்குப் பிறகு நான் கேட்க முடியாது. அதனால் நான் இப்பொழுதே கேட்கிறேன்,